Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC.NO. 139/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 04 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. குமரேசன் | | |
| கணவர் பெயர் | திரு. சென்றாயன் | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | பாச்சல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 26th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>.- ( 2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை 3 –4 மணியளவில் நானும் கோபி என்பவரும் மாக்கனுர் இருந்தபோது, போலீசார் அங்கு நடந்த ஒரு அடிதடி வழக்கு சம்பந்தமாக பார்வையிட வந்திருப்பதாகவும், அதற்கு என்னையும் கோபி என்பவரையும் சாட்சியாக இருக்ககும்படி கேட்டுக்கொணடு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதன் பின்பு எங்களை காவல் நிலையம் அழைத்து சென்று கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையதுதான். மேலும் சம்பவ இடத்தில் இருந்த கல் மற்றும் பீர் பாட்டிலையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மொத்தம் 2 கையொப்பம் செய்தேன். ஒரு கையொப்பம் சம்பவ இடத்திலும் ஒரு கையொப்பம் காவல் நிலையத்திலும் போட்டேன். நான் கையொப்பம் செய்த தாள்களில் என்ன விவரம் இருந்தது என்று தெரியுமா என்றால் வரைப்படம் வரைந்து சம்பவத்தை பற்றி எழுதி இருந்தார்கள். சம்பவ இடம் என் வீட்டில் இருந்து 1.5 கி.மீ தொலைவில் உள்ளது. நான் மாலை 5.30 மணியில் இருந்து 8.30 மணி வரை பால் வியபாரம் செய்வேன். போலீசார் சம்பவ இடத்திற்கு 3.30 மணிக்கு வந்தார்கள். போலீசார் என் முன்னிலையில் பீர் பாட்டில் மற்றும் கல் கைப்பற்றினார்கள். அந்த ஆயுதங்களை நான் போலீசாருக்கு அடையாளம் காட்டினேன். நான் பொருட்களை கையில் எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் சுமார் 3-4 நபர்கள் இருந்தார்கள். சுமார் 1 மணிநேரம் இருந்தார்கள். போலீசார் கேட்டுகொண்டதின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//True Copy//

SD/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC.NO. 139/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 03 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கோபி | | |
| கணவர் பெயர் | திரு. ஜெயராமன் | தொழில் | பால் வியபாரம் |
| கிராமம் | பாச்சல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 26th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- ( 2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பால் வியபாரம் செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை 3 –4 மணியளவில் நானும் குமரேசன் என்பவரும் மூக்கனுரில் இருந்தபோது, போலீசார் அங்கு நடந்த ஒரு அடிதடி வழக்கு சம்பந்தமாக பார்வையிட வந்திருப்பதாகவும், அதற்கு என்னையும் குமரேசன் என்பவரையும் சாட்சியாக இருக்ககும்படி கேட்டுக்கொணடு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதன் பின்பு எங்களை காவல் நிலையம் அழைத்து சென்று கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த பார்வை மகசர் என்னால் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேலும் சம்பவ இடத்தில் இருந்த கல் மற்றும் பீர் பாட்டிலையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கைப்பற்றுதல் மகசர் என்னால் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மொத்தம் 2 கையொப்பம் செய்தேன். ஒரு கையொப்பம் சம்பவ இடத்திலும் ஒரு கையொப்பம் காவல் நிலையத்திலும் போட்டேன். நான் கையொப்பம் செய்த தாள்களில் என்ன விவரம் இருந்தது என்று தெரியுமா என்றால் வரைப்படம் வரைந்து சம்பவத்தை பற்றி எழுதி இருந்தார்கள். சம்பவ இடம் என் வீட்டில் இருந்து 1.5 கி.மீ தொலைவில் உள்ளது. நான் மாலை 5.30 மணியில் இருந்து 8.30 மணி வரை பால் வியபாரம் செய்வேன். போலீசார் சம்பவ இடத்திற்கு 3.30 மணிக்கு வந்தார்கள். போலீசார் என் முன்னிலையில் பீர் பாட்டில் மற்றும் கல் கைப்பற்றினார்கள். அந்த ஆயுதங்களை நான் போலீசாருக்கு அடையாளம் காட்டினேன். நான் பொருட்களை கையில் எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் சுமார் 3-4 நபர்கள் இருந்தார்கள். சுமார் 1 மணிநேரம் இருந்தார்கள். போலீசார் கேட்டுகொண்டதின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//True Copy//

SD/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .No.139/2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 02 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மாது | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு.ஜெயராமன் | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | பாச்சல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 49 |
| எதிரி ஆஜர் | | | 2 |
| எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of March 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.2திரு. மாது முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மகன். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் மூக்கனுரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஏற்கனவே எதிரிகளுக்கும் என் மகனுக்கும் முன் விரேதம் இருந்து வந்தது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் வருடம் நினைவில்லை. ஒரு நாள் என் மகன் மாக்கனுர் கூட்டுரோட்டில் மாலை 3 மணிஅளவில் மீன் வாங்கிகொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் மது அருந்திக்கொண்டிருந்ததாகவும், பாட்டிலை எடுத்து என் மகன் மீது வீசியதாகவும், அதை கேட்டதற்கு பீர் பாட்டிலால் தலையில் தாக்கியதாகவும், சூர்யா என்பவர் கல்லால் என் மகனின் தலையில் மற்றும் முதுகில் தாக்கியதாகவும், வண்டி சாவியை வாங்கி வைத்துக்கொண்டதாகவும் எனக்கு போன் செய்து தகவல் கூறினார். அப்போது நான் நாற்றாம்பள்ளியில்

இருந்தேன். உடனே தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்த போது எதிரிகள் போன் செய்து பல  நபர்களை வரவைத்து இருந்தார்கள். பின்பு அவர்களும் சேர்ந்து என் மகனை தாக்கினார்கள். என் மகனுக்கு அதிக காயங்கள் இருந்ததால் நான் அவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

//True Copy//

SD/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .No.139/2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 01 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. உதயக்குமார் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மாது | தொழில் | வியபாரம் |
| கிராமம் | பாச்சல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 25 |
| எதிரி ஆஜர் | | | 2 |
| எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of March 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.1 திரு. உதயக்குமார் முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வியபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் மூக்கனுரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஏற்கனவே எதிரியின் நண்பரான சிலம்பு என்பவர் என் கையை வெட்டியதால் எங்களுக்குள் ஏற்கனவே முன்பகை உள்ளது. கடந்த 16.12.2022 அன்று மதியம் 3.00 மணியளவில் மூக்கனுர் கூட்டுரோட்டில் உள்ள சேகர் மீன் கடை அருகே மீன் வாங்க நானும் என் தம்பி தினேஷ்குமார் என்பவரும் சென்றிருந்தோம். அங்கு எதிரிகள் இருவரும் மது அருந்திக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி சூர்யா என்பவர் என்டா பாக்குரா என்று கூறி பீர் பாட்டிலை என் கால் மீது போட்டார். நான் உங்களை பார்க்கவில்லை மீன் வாங்க தான் வந்தேன் என்று கூறியதற்கு எதிரி சூர்யா பீர் பாட்டிலால் என் தலையில் தாக்கினார். பின்பு எதிரி சூர்யா கல்லை எடுத்து என் நெற்றியில் தாக்கி காயம்

ஏற்படுத்தினார். பின்னர் ஒரு பீர் பாட்டிலால் எனது இடது புற தோள்பட்டையில் தாக்கி காயம் ஏற்படுத்தியதில் தற்போதும் எனக்கு பெரிய வடு உள்ளது. பின்பு நான் என் தந்தைக்கு போன் செய்து தகவல் கூறினேன். பின்பு எதிரிகள் சுமார் 10-15 நபர்களை வர வைத்து மீண்டும் பிரச்சனை செய்து என் வண்டி சாவியை பிடுங்கி கொண்டார்கள். நீ யார வேணா வர சொல்லு உன்னை இங்கையே பீர் பாட்டிலால் குத்தி கொன்றுவிடுவேன் என்று இருவரும் மிரட்டினார்கள். பின்பு என்னை கையில் தாக்கிய சிலம்பு என்பவரை வரவைத்து சிலம்பு என்னை தலையில் கையால் தாக்கினார். பின்பு காயம் பட்ட என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **( அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. )** என்னிடம் காட்டப்படும் பீர் பாட்டில் மற்றும் கல்லால் தான் 1ம் எதிரி என்னை தாக்கினார். ( **அந்த பீர் பாட்டில் மற்றும் கல் அ.சா.பொ.1, 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

//True Copy//

SD/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.